# தமிழ் நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி எண்: 24347590


**ஆணை நாள்: 01.12.2015 (முற்பகல்)**

**முன்னிலை**

**திருமதி பா.நீலாம்பிகை, எம்.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

..........

## வழக்கு எண்.SA 7266/விசாரணை/E/2015

திரு ச.கருணாநிதி,
இளநிலை உதவியாளர்,
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி,
தஞ்சாவூர் – 613 004. ... மனுதாரர்

பொதுத் தகவல் அலுவலர்,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்,
கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010. ... பொது அதிகார அமைப்பு

*********

**ஆணை**

இன்று (01.12.2015) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு ச.கருணாநிதி ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு பெ.திராவிடச்செல்வம், இளநிலை நிர்வாக அலுவலர், மருத்துவக் கல்வி இயக்ககம், சென்னை ஆஜரானார்.

2. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)–ன் கீழ் 22.05.2015 அன்று தாக்கல் செய்த இரண்டாவது மேல் முறையீட்டின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (01.12.2015) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மேல் முறையீடானது மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 07.05.2015 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் ஆனதாகும்.

3. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் 07.05.2015 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்த மனுவில் புள்ளியியலாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டது தொடர்பாக 5 இனங்களில் தகவல் கோரியுள்ளார். மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரும் தகவலானது புள்ளியியலாளர் பணியிடத்திற்காகத் தயாரிக்கப்பட்ட மூப்புரிமை பட்டியல், தேர்ந்தெடுக்கப்பட்ட கோப்பின் நகல், திருமதி வி.சர்மிளா என்பவர் தேர்வு செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையின் நகல், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்களின் 29.03.2014 தேதியிட்ட கடிதம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கப்பட்ட கடிதத்தின் நகல், புள்ளியியலாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்ய விளம்பரம் செய்யப்பட்ட கடிதத்தின் நகல் ஆகியவையாகும்.

4. இன்றைய விசாரணையின்போது மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தனக்குத் தகவல் வழங்கப்படவில்லையென்றும், முழுமையான தகவல் தனக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் கூறினார். மனுதாரரின் மனுவானது 11.05.2015 அன்று தபால் பிரிவில் பெறப்பட்டதாகவும், 12.05.2015 அன்று தங்களது பிரிவில் கிடைக்கப் பெற்றதாகவும், 11.06.2015 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரர்/மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல் அடங்கிய கோப்பானது முடிவு பெறாது, கடிதப் போக்குவரத்து நிலுவையில் இருப்பதால் இனம் 1, 2, 4–ற்குப் பதில் அளிக்க இயலவில்லையென்றும், இனம் 3–ல் கோரிய தகவல் மூன்றாம் நபர் குறித்த தகவல் என்றும், எனவே அதனை வழங்க இயலாது என்றும், இனம் 5–ல் கோரியுள்ள தகவலில் 2010 முதல் 2014 வரையிலான தகவல் பக்கம் ஒன்றிற்கு ரூ.2/– வீதம் 14 பக்கங்களுக்கு ரூ.28/– செலுத்தி பெற்றுக் கொள்ள அறிவுறுத்தியதாகத் தெரிவித்ததாகவும் கூறி, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார். அசல் கோப்பை நோக்கும்போது, மனுதாரர்/ மேல்முறையீட்டாளரின் மனுவானது 12.05.2015 அன்று பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் பெறப்பட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005–ன்படி வரையறுக்கப்பட்ட 30 நாட்களுக்குள் 11.06.2015 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரர்/மேல்முறையீட்டாளருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

5. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரியுள்ள தகவலில் இனம் 3–ல் கோரியுள்ள தகவலானது திருமதி வி.சர்மிளா என்பவருக்குப் பணி நியமனம் செய்த அரசாணையாகும். மூன்றாம் நபருக்குப் பணி நியமனம் செய்து பிறப்பிக்கப்பட்ட உத்திரவு நகல் எந்தவிதமான பொது நலன் கருதி தாக்கல் செய்யப்படாத மனுவின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய அவசியம் இல்லையென ஆணையம் முடிவு செய்கிறது. மேலும் இனம் 1, 2, 4 ஆகியவை புள்ளியியலாளர் தேர்வுக்கான கோப்பு குறித்த தகவலாகும். அக்கோப்பு மருத்துவக் கல்வி இயக்ககத்தில் நிலுவையில் இருந்த காரணத்தால் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் வழங்க இயலவில்லையென்று பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன்பு தெரிவித்தது ஏற்புடையது என ஆணையம் முடிவு செய்கிறது. இனம் 5–ற்கான தகவலுக்கு உரிய கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு உரிய காலத்தில் அறிவுறுத்தியபின்பும், அத்தகவல் மனுதாரர்/மேல்முறையீட்டாளருக்கு உரிய காலத்தில் கிடைத்த பின்பும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் உரிய கட்டணத்தைச் செலுத்தி அத்தகவலைப் பெற்றுக் கொள்ள முன்வரவில்லை. மேலும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் இதே பொருள் குறித்து மூன்று இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்கள் ஆணையத்திற்குத் தாக்கல் செய்து, அம்மூன்று மேல்முறையீட்டு மனுக்களும் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

6. இவ்வழக்கைப் பொறுத்த அளவில், உரிய கட்டணம் செலுத்தி தகவல்களைப் பெற்றுக்கொள்ள மனுதாரர்/மேல்முறையீட்டாளர் முன் வராததை நோக்கும்போது, மனுதாரர்/

மேல்முறையீட்டாளருக்கு உண்மையிலேயே தகவலைப் பெற்றுக்கொள்ளும் ஆர்வம் உள்ளதா என்னும் கேள்வி எழுகிறது. மனுதாரர்/மேல்முறையீட்டாளர் அதேத் துறையில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் நிலையில், அவருக்குத் துறை ரீதியாக ஒவ்வொரு கோப்பும் கையாளப்படும் விதம் நன்றாகத் தெரியும். அவ்வாறிருக்கும் சூழ்நிலையில், வழங்கக்கூடிய தகவலைப் பெற்றுக்கொள்ள தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005–ன் ஷரத்துக்களுக்குட்பட்டு மனுதாரர்/மேல்முறையீட்டாளருக்குத் தெரிவிக்கப்பட்டபின்பும் உரிய கட்டணம் செலுத்தி தகவலைப் பெற்றுக் கொள்ளாத நிலையிலும், அதிக அளவிலான பொது நலன் கருதி இம்மனு தாக்கல் செய்யப்படவில்லையென்னும் நிலையிலும், இம்மனுவினை பரிசீலனை செய்வதற்கு எந்தவிதமான சிறப்பு முகாந்திரமும் இல்லையென ஆணையம் முடிவு செய்கிறது.

7. விசாரணையின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் மனுதாரர்/ மேல்முறையீட்டாளருக்கு 11.06.2015 தேதியிட்ட கடிதம் வாயிலாக வழங்கக்கூடிய தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

ஒம்/–பா.நீலாம்பிகை
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண்.SA 7266/விசாரணை/E/2015</u>

பெறுநர்

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்,
மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகம்,
கீழ்ப்பாக்கம்,
சென்னை – 600 010.

<u>மனுதாரர்</u>

திரு ச.கருணாநிதி,
இளநிலை உதவியாளர்,
தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி,
தஞ்சாவூர் – 613 004.
Copy to: Judgement File.
Spare.
*"ptl ps 11/12/15"*